# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 131/2021
## PW15

| | | |
|---|---|---|
| Name | : | குமார் |
| Father's/Husband's Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.01.2025.

A1 to 3 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். கடந்த 08.03.2017 ம் தேதி நான் திருவண்ணாமலை கிராமிய காவல் நிலைய வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தேன். அந்த வட்டத்தில் மங்கலம் காவல் நிலையமும் உள்ளடங்கும். 08.03.2017 ந் தேதி மங்கலம் காவல் நிலையத்தில் ரவி என்பவர் கொடுத்த புகாரை பெற்று மங்கலம் காவல் நிலைய உதவி ஆய்வளாளர் முத்தையாசெட்டி என்பவர் குற்ற எண். 58/2017 U/s 174 Crpc படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என் பார்வைக்கு வைத்திருந்தார். நான் அதை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 09. 03.2017 அன்று காலை 6.00 மணிக்கு சம்பவ இடமான மங்களம், தென்னமரத்தெருவில் இறந்துபோன ரமேஷ் வாடகைக்கு குடியிருந்த வீட்டை பார்வையிட்டேன். சாட்சி பாஸ்கர், சரண்ராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்செய்தேன். அந்த

மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 10 .** அதே சாட்சிகள் முன்னிலையில் அந்த சம்பவ இடத்தில் இருந்து ரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரை துண்டு உடைத்து எடுக்கப்பட்டது. அதேபோல் ரத்தக்கரை படியாத மாதிரி சிமெண்ட் துண்டு எடுக்கப்பட்டது. அந்த இடத்தில் இருந்து உடைந்த பழுப்பு நிற வைளையல் துண்டுகளும் எடுக்கப்பட்டது. அவற்றை மகஜரில் கைப்பற்றினேன். சாட்சிகள் ரவி, அன்பழகன், கமல்நாத், பெரியசாமி, மீனா, அமலா, ரவிச்சந்திரன், பாஸ்கர், சரண்ராஜ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சவக்கிடங்கில் சென்று இறந்துபோன ரமேஷ் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயாரித்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.11.** பிரேதத்தை கூராய்வு செய்து தலைமைக்காவலர் 1088 காமராஜ் என்பவரிடம் வேண்டுகோள் கடிதத்தை ஒப்படைத்தேன். பின்னர் சாட்சி கலைவாணன், சரத்குமார், சரவணன், கணேசன், சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட உள்ளுறுப்புகளை தடய அறிவியல் துறைக்கு ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன். பிரேதத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆடைகளை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே இவ்வழக்கின் சட்டப்பிரிவை 174 குவிமுச -வில் இருந்து பிரிவு 302 இதச என மாற்றம் செய்து பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.12.** 10.03.2017 ந் தேதி இவ்வழக்கின் எதிரிகளை கார்த்திகேயன், சரண்யா, ராஜசேகர் ஆகியோகளை சாட்சி அடையாளம் காட்ட மங்களம் காலனி, பிள்ளையார் கோவில் அருகில், அவர்களை கைது செய்வதற்கான காரணம் கூறி கைதுசெய்தேன். பின்னர் சாட்சி ஆனந்தராஜ், பாலமுருகன் ஆகியோர் முன்பாக எதிரி கார்த்திகேயனை விசாரித்தபோது அவர் எந்தவித அச்சுறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் முன்னிலையில் பதிவுசெய்தேன். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி சரண்யா ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதையும் பதிவு செய்தேன். எதிரி ராஜசேகர் சாட்சிகள் முன்னிலையில் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதையும் பதிவு செய்தேன். எதிரி கார்த்திகேயனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி

**அ.சா.ஆ.7** தான். அதன் அடிப்படையில் எங்களை எதிரி மங்கலம் காலனி, தென்னைமர குறுக்கு தெரு, ரமேஷ் வீட்டின் எதிரில் உள்ள ஆறுமுகம் காலிமனையில் உள்ள முட்புதரில் இருந்து எடுத்த ஆஜர் செய்த சுமார் 150 செ.மீ நீளமுள்ள ஒரு பக்கம் சுருக்கு போட்ட வெள்ளை நிற ரத்தக்கரை படிந்த கயிறு ஒன்றை மகஜரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.சா.ஆ.8 தான். சாட்சிகள் ஆனந்தராஜ், பாலமுருகன் ஆகியோரை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்துகளை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். பின்னர் மங்கலம் காவல் நிலையத்தில் எதிரிகளை திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்துகளை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப நீதிமன்ற கடிதம் பெற்று அனுப்பிவைத்தேன். நான் பணிமாறுதலில் சென்றதால் எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் கோவிந்தசாமி வழக்கினை மேல் விசாரணைக்கு மேற்கொண்டார். சாட்சிகள் அன்பழகன், பெரியசாமி, கலைவாணன் ஆகியோர் வழக்கிற்கு ஏற்றவாறு என்னிடம் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கை 09.03.2017 ம் தேதி அதிகாலை 03.00 மணிக்கு என் பார்வைக்கு வைக்கப்பட்டது. நான் திருவண்ணாமலையில் இருந்தபோது எனக்குஅதிகாலை 03.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தது பற்றி தொலைபேசி யில் தகவல் தெரிவிக்கப்பட்டது. நான் மங்கலம் காவல் நிலையத்திற்கு அதிகாலை 03.30 மணிக்கு சென்றடைந்தேன். காலை 6 மணிவரை நான் புலன் விசாரணை எதுவும் செய்யவில்லை. 07.03.2017 அன்று அ.சா.1 ரவியை மங்களம் காவல் நிலையத்தில் நான் விசாரணை செய்யவில்லை. சாட்சி மீனாவை 09.03.2017 அன்று காலை 07.00 மணிக்கு சம்பவ இடத்தில் விசாரணை செய்தேன். சாட்சி மீனாவை விசாரித்தபோது அங்கு யார் இருந்தார்கள் என்றால் சாட்சிகள் ரவி, கமல்நாத், அன்பழகன், பிச்சைக்காரன் ஆகியோர் இருந்தார்கள். சம்பவத்திற்கு முன்பு , ஒரு வருடத்திற்கு முன்பு 1ம் எதிரி இறந்துபோன ரமேஷை கத்தியால் குத்த வந்தார் என்றும், நாங்கள் அனைவரும் சமாதானம் செய்து அவர்களை வீட்டிற்கு அனுப்பினோம் என்று எனது விசாரணையில் சொல்லவில்லை. சாட்சி 2 மீனா, 2ம் எதிரி சரண்யாவுடன் நூல் மில்லிற்கு வேலைக்கு சென்றதாக என்னிடம் சொல்லவில்லை. சாட்சி மீனா சம்பவம் நடப்பதற்கு முந்நாள் இரவு 8.00

ரமேசும், சரண்யாவும் தெருவில் சண்டை போட்டதாக சொல்லியுள்ளார்களா என்றால் வீட்டில் சண்டை போட்டதாக சொல்லியுள்ளார்.

<u>**வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை**</u> - ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.